**தலைப்பு 300 – உணவு ஆணையாளர் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உணவு ஆணையாளர் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் உணவு ஆணையாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 25 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உணவு ஆணையாளர் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

அரச கணக்குகள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட அரச கணக்குகள் வழிகாட்டியின் இலக்கம் 03 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அந்த தேவைப்பாடுகளுக்கு புறம்பான சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 570,950,000 மொத்த செலவினம் உள்நாட்டு நிதியம் (11) இன் மூலம் ரூபா 549,950,000 தொகையும், வெளிநாட்டு நிதியீட்டத்துடன் தொடர்புடைய கிரயம் (17) இன் மூலம் ரூபா 21,000,000 தொகையும் ஆக நிதியீட்டம் செய்யப்பட்டிருந்த போதிலும் ACA 2(IV) மற்றும் ACA 2(V) படிவங்களில் மொத்த செலவினமும் உள்நாட்டு நிதியம் (11) இன் மூலம் நிதியீட்டம் செய்யப்பட்டதாக காண்பிக்கப்பட்டிருந்தது. | தவறுதலாக அந்த மொத்த செலவினமும் உள்நாட்டு நிதியத்தில் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஏனைய இயந்திர உபகரணங்களின் கீழ் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 682,120 தொகையான கொள்வனவுகள் திறைசேரி அச்சிடலில் (SA 82) இல் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட கணனி உபகரணங்கள் குறித்துரைத்த பிரகாரம் CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஏனைய வருமானத் தலைப்பிற்காக அறிக்கையிடும் நிறுவனத்தால் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 186,604,076 கட்டுநிதி இணக்கக் கூற்றில் உள்ளடக்கப்படாதிருந்த துடன் ஏனைய தலைப்புக்களுக்காக அறிக்கையிடுகின்ற நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 14,075,525 ஆக இருந்த போதிலும் கட்டுநிதி இணக்கக் கூற்றில் அது ரூபா 198,689 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | இணங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2021 நவம்பர் 26 ஆந் திகதிய 2021/03 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 7.2 பந்தியின் பிரகாரம் ஏனைய வருமானம் கணக்கீட்டு உத்தியோகத்தருக்காக அறிக்கையிடுகின்ற நிறுவனத்தால் சேகரிக்கப்பட்ட வருமானம் நிதிசார் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்க முடியாதிருந்த போதிலும் ஏனைய வருமானம் கணக்கீட்டு உத்தியோகத்தருக்காக திணைக்களத்தால் சேகரிக்கப்பட்ட ரூபா 186,604,076 நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏனைய பிரதான பேரேட்டுக் கணக்கில் பெறுவனவின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 5,337,146 பெறுமதி ஏனைய பிரதான பேரேட்டுக் கணக்கில் கொடுப்பனவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | அது சரிசெய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் (SA 82) பொருட் களஞ்சியம் தொடர்பாக முன்னைய ஆண்டின் இறுதி மீதி ரூபா 3,489,301,978 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக ரூபா 3,616,601,978 காண்பிக்கப்பட்டமையால் ரூபா 127,300,000 தொகை மேலதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு மேலதிகமாக காண்பிக்கப்பட்ட ரூபா 127,300,000 இனை அகற்றுமாறு காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அவ்வாறான அகற்றுதல் மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் வெளிப்படுத்தப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டில் பொருட் களஞ்சியம் தொடர்பாக எந்தவொரு வேறுபாடும் ஏற்படாதிருந்ததுடன் SA 82 அறிக்கைகளில் 2020 இல் அறிக்கையிடப்பட்ட தகவல்கள் 2021 ஆம் ஆண்டின் போதும் அறிக்கையிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சரியான தகவல்களை கணக்குகளில் வெளிப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஒரு மீண்டெழும் செலவின விடயத்திற்காகவும், ஒரு மூலதன செலவின விடயத்திற்காகவும் ஒதுக்கப்பட்ட ரூபா 4,000,000 தொகையான மொத்த நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | கொவிட் நிலைமையுடன் திணைக்களத்தின் அத்தியவசிய களஞ்சியத்தை மாத்திரம் பழுதுபார்ப்பதற்கு முன்னுரிமை வழங்கியதால் வாகனங்களை பழுதுபார்க்கும் நடவடிக்கைகள் காலம் தாழ்த்தப்பட்டமையின் காரணமாக இந்த நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | வருடாந்த மதிப்பீட்டின் மூலம் மிகை நிதியேற்பாட்டை ஒதுக்குதல் கட்டுப்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 02 மூலதன செலவின விடயங்களுக்காக கூட்டுப்பெறுமதி ரூபா 1,800,000 ஆன தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 1,547,651 சேமிப்பொன்று காணப்பட்டதுடன் அது தேறிய நிதியேற்பாட்டில் 28 சதவீதத்திற்கும் 98 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. | கொவிட் தொற்றுநோய் நிலைமையின் காரணமாக இந்த செலவின விடயங்களின் அத்தியவசிய செயற்பாடுகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டமையால் இவ்வாறு நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | வருடாந்த மதிப்பீட்டின் மூலம் மிகை நிதியேற்பாட்டை ஒதுக்குவதை கட்டுப்படுத்துதல் வேண்டும். |
| (இ) | 06 செலவின விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாடு மிகை மற்றும் பற்றாக்குறையின் அடிப்படையில் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் 1101 மற்றும் 1402 செலவின விடயங்களுக்கு நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் மாற்றப்பட்டு ஆண்டின் இறுதி வரை முறையே 88 சதவீதம் மற்றும் 64 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | நிதிப்பிரமாணம் 66 மாற்றல்கள் மேற்கொள்ளும் போது தேவையினை கவனத்தில் கொண்டு மாற்றுதல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஈ) | 1003 ஏனைய படிகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 17,000,000 தொகையான நிதியேற்பாட்டில் ரூபா 4,375,000 ஆன 26 சதவீதம் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டதன் பின்னரும் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 2,452,865 நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டுடன் ஒப்பிடும் போது 40 சதவீத மாற்றல்கள் மற்றும் சேமிப்புக்கள் காணப்பட்டமையால் சரியான பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | மதிப்பீடு தயாரிக்கும் போது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டமையால் மிகை மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. | சாத்தியமான மதிப்பீட்டை தயாரிப்பதற்கு கண்காணித்துக் கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 1101 உள்நாட்டு பிரயாணச் செலவின விடயத்தில் பாதீடு செய்யப்பட்ட மதிப்பீட்டின் மூலம் ரூபா 250,000 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் நிதிப்பிரமாணம் 66 இன் மாற்றல்களின் கீழ் ரூபா 1,000,000 மேலதிக நிதியேற்பாடு பெறப்பட்டிருந்தது. திருத்தப்பட்ட மதிப்பீட்டில் 70 சதவீதம் சேமிப்பதற்கு காரணமாக நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் மாற்றும் போது மதிப்பீடு செய்யப்பட்ட தொகையினை விட அதிகரித்த தொகையொன்று கிடைத்ததாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் விண்ணப்பிக்கும் போது ரூபா 1,000,000 மேலதிக நிதியேற்பாடு கோரப்பட்டிருந்தது. | பற்றாக்குறை நிதியேற்பாட்டை மாற்றும் போது ரூபா 100,000 தேவை ரூபா 1,000,000 ஆக காண்பிக்கப்பட்டமையால் அந்த நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 66 இன் மாற்றல்கள் மேற்கொள்ளும் போது தேவையினை கவனத்தில் கொண்டு மாற்றல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 215(3)(ஆ) மற்றும் (இ) இன் பிரகாரம் வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்ட நிதியேற்பாடு காணப்படாதிருக்கும் போது நிதிக்கூற்றுக்களின் அட்டவணை (V) இன் கீழ் ரூபா 2,259,528 கூட்டுத்தொகையான பொறுப்புக்கள் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | அதனை மீண்டும் சரிசெய்து பதிலுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிப்பதற்கு கண்காணித்துக் கொள்ளல் வேண்டும். |
| (ஆ) | பிரயாண செலவினங்கள், மேலதிக நேரம், விடுமுறை தின சம்பளம் மற்றும் பதிற்கடமைகளுக்கு உரியதாக ரூபா 236,563 | அதனை மீண்டும் சரிசெய்து பதிலுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிப்பதற்கு கண்காணித்துக் கொள்ளல் |

| | | | |
|---|---|---|---|
| | தொகை நிதிப்பிரமாணம் 94(2) மற்றும் (3) இன் பிரகாரம் உடன்பட்ட கடப்பாட்டுக் கூற்றில் குறிப்பு (iv) இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. மேலும் நிதிப்பிரமாணம் 94(2) மற்றும் (3) இன் பிரகாரம் உடன்பட்ட கடப்பாட்டு கூற்றின் (அட்டவணை iv) காண்பிக்கப்பட்ட வருடாந்த மீண்டெழும் சேவைகள் மற்றும் வழங்கல்களுக்கான கொடுப்பனவுகளுக்குரிய கூட்டுத்தொகை ரூபா 2,022,965 குறிப்பு (iii) இன் கீழ் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய செலுத்த வேண்டிய ஆதனவரி ரூபா 301,138 தொகை 2022 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த பணம் பொறுப்பாக காண்பிக்கப் பட்டிருக்கவில்லை. | ரூபா 301,138 இற்குரிய ஆதனவரி மதிப்பீடு உரிய காலத்தில் கிடைத்திருக்கவில்லை. அது திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிப்பதற்கு கண்காணித்துக் கொள்ளல் வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணகாய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் | பெறுமதி ரூபா | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 571 | 19,945,778 | 02 வருடங்கைள விஞ்சிய கூட்டுத்தொகையான ரூபா 19,945,778 வைப்பு மீதி தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. அதனுள் 10 | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்பு மீதியில் 02 வருடங்களை விஞ்சிய வைப்பு மீதியாக இருந்ததுடன் தற்போதும் வாடகை அடிப்படையில் பயன்படுத்துகின்ற களஞ்சியம் மற்றும் வீடுகளுக்கான வைப்பு மீதியும் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | வருடங்களை விஞ்சிய ரூபா 5,816,443 மீதியும், 05 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான ரூபா 7,728,263 மீதியும் உள்ளது. | உள்ளடங்கியுள்ளது. | |
| (ஆ) | 2021 ஒக்தோபர் 26 ஆந் திகதிய 2021/02 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டியின் 4.5 ஆம் பந்தி | 457,216 | மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய செலவினமாக கணக்குகளில் வெளிப்படுத்தப்படாத ரூபா 457,216 பொறுப்புக்கள் 2022 ஆம் ஆண்டின் சனவரி மாதத்தில் தீர்க்கப் பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கான தகவல்கள் சேகரிக்கும் போது 2022 சனவரி மாதம் முடிவடையும் வரை மாத்திரம் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றுக்காக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.4 வங்கிக் கணக்கு செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 பெப்ரவரி 10 ஆந் திகதி முதல் 2021 திசெம்பர் 27 ஆந் திகதி வரை கணக்கிற்கு நேரடியாக செலவு வைக்கப்பட்ட ரூபா 580,718 இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இனங்காணப்படாத பெறுவனவுகளுக்காக உறுதிப்படுத்தல் பெறப்படாதிருந்ததுடன் இனங்காண முடியுமான பெறுவனவுகளின் நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு அறிவித்து உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இனங்காணப்படாத பெறுவனவுகளை தாமதமின்றி உறுதிப்படுத்தி கணக்கீடு செய்தல் விரைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| உணவு ஆணையாளர் திணைக்களம் ‘‘பாதுகாப்பாக தொடர்ச்சியாக, போசணைமிக்க தானிய உணவுகள் சகல வீடுகளுக்கும்’’ என்ற | 2021 ஆம் ஆண்டில் அரிசிக்காக அரசாங்கத்தினால் கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டிருந்ததுடன் | நிறுவனத்தின் தொலைநோக்கு மற்றும் பிரதான நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு |

| | | |
|---|---|---|
| தொலைநோக்கின் பிரகாரம் அமுல்படுத்தப்படுவதுடன் அதன் கீழ்<br>(அ) பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய நாடுகள் அமைப்பின் (SAARC) கொழும்பு விஞ்ஞாபனம் மற்றும் 16 ஆவது மாநாட்டின் பிரகாரம் மெற்றிக் தொன் 8,000 விசேட அரிசி ஒதுக்கமொன்றை பேணிச் செல்லல்.<br>(ஆ) 2008 ஏப்ரல் 27 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நாடு முழுவதும் காணப்படுகின்ற உணவு திணைக்களத்திற்கு சொந்தமான களஞ்சியங்களில் மெ.தொ. 100,000 பாதுகாப்பு அரிசி இருப்பொன்றை பேணிச் செல்லல்.<br><br>பிரதான பணிகளாக இனங்காணப்பட்ட போதிலும் 2021 ஆம் ஆண்டில் திணைக்களத்தால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பின்னர் அரசாங்கத்தினால் அந்த கட்டுப்பாட்டு விலை நீக்கப்பட்டதுடன் உள்நாட்டு சந்தையில் விரைவாக அரிசி விலை அதிகரித்து சென்றிருந்தது. இதற்கு பதிலாக அரிசி இறக்குமதிக்காக முன்மொழியப்பட்டிருந்த துடன் பாதுகாப்பு அரிசி இருப்பினை வைத்துக் கொள்வதற்காக உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 200 மில்லியன் நிதியேற்பாடு, அரச வணிக கூட்டுத்தாபனத்தின் மூலம் அரிசி இறக்குமதி செய்யப்பட்டு சதொச ஊடாக நாடு முழுவதும் பகிர்ந்தளிப்பதற்காக அரச வணிக கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் மூலம் நாட்டில் அரிசி புழக்கத்தை ஏற்படுத்தி அரிசி விலையினை கட்டுப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. | உரிய செயற்பாடுகளை தாமதமின்றி அமுல்படுத்துதல் வேண்டும். |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் இறுதி தடவையாக 2019 ஆம் ஆண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் 10 மாவட்டங்களில் 96 காணிகள் மற்றும் களஞ்சியங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 15 மாவட்டங்களில் 28 காணிகள் மற்றும் கட்டிடங்கள் மேலும் மதிப்பீடு செய்ய வேண்டியிருந்தது. | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நாட்டில் காணப்பட்ட COVID-19 தொற்றுநோய் நிலைமை மற்றும் நடமாடும் கட்டுப்பாடுகளின் காரணமாக சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்கு முடியாதிருந்தது. இந்த ஆண்டின் போது உரிய மதிப்பீட்டு நடவடிக்கைகளை செய்வதற்கு தேவையான மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | மதிப்பீட்டு செயற்பாடுகளை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 நட்டம் மற்றும் இழப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| நட்டம் மற்றும் கைவிடல்களில் நீண்டகாலம் முதல் கொண்டுவரப்படுகின்ற மீதி தொடர்பாக நி.பி. 104 இன் பிரகாரம் பரிசோதனை மேற்கொண்டு ஆரம்ப அறிக்கை மற்றும் முழுமையான அறிக்கையை பெற்று உரிய பணத்தை அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணம் ‘‘பீ’’ கணக்கின் திணைக்கள புத்தகங்கள் மற்றும் திறைசேரி கணனி அச்சிடல் குறிப்புக்களுக்கும் இடையே முன்னைய ஆண்டுகள் முதல் கொண்டு வரப்படுகின்ற ரூபா 332,250 வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் அந்த வேறுபாடு 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முன்னைய ஆண்டுகள் முதல் கொண்டு வரப்படுகின்ற இந்த வேறுபாட்டை இனங்காண்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை விளைவுகளை கண்டறிய முடியாதிருந்தது. இயலுமான வரை இந்த வேறுபாட்டை கண்டறிந்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வேறுபாட்டை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மரணமடைந்த உத்தியோகத்தரிடமிருந்தும், ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்தும், சேவையை விட்டுச் சென்ற மற்றும் சேவையை விட்டு விலகிய உத்தியோகத்தர் களிடமிருந்தும் அறவிட வேண்டிய ரூபா 1,697,190 கடனை அறவிடுவதற்கு | மரணமடைந்த உத்தியோகத்தரிடமிருந்தும், ஓய்வு பெற்ற உத்தியோகத்தரிடமிருந்தும் அறவிட வேண்டிய கடன் மீதி தொடர்பாக அந்த உத்தியோகத்தர்களின் தகவல்களை கண்டறிய முடியாமையின் அடிப்படையில் | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பழைய கடன் மீதி தீர்க்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.<br>2020 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றுச் சென்ற 06 உத்தியோகத்தர்களின் கடன் மீதி தற்போது தீர்த்து வைக்கப்பட்டுள்ளதுடன் ஒரு வருடத்திற்கு குறைவான கடன் மீதி காணப்படுகின்ற ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தரின் கடன் மீதி இந்த ஆண்டின் போது தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.<br>ஒரு வருடத்திற்கு குறைவான நிலுவைக் கடன் மீதி காணப்படுகின்ற வேலை நீக்கம் செய்யப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர் களின் நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்காக அவர்களின் தற்போதைய நிலைமை தொடர்பாக நிர்வாக பிரிவிலிருந்து தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | |
| (இ) | பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய நாடுகள் அமைப்பின் (SAARC) கொழும்பு விஞ்ஞாபனம் மற்றும் 16 ஆவது மாநாட்டின் பிரகாரம் தெற்காசிய பிராந்திய நாடுகளின் அவசர இடர் ஒதுக்கமொன்று இலங்கையில் பேணிச் செல்லப்பட வேண்டியிருந்தது. அது திணைக்களத்தின் பிரதான பணியாக இனங்காணப்பட்டிருந்த துடன் 2021 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்திலும் ரூபா 200 மில்லியன் அதற்காக மதிப்பீடு | உணவு ஆணையாளர் திணைக்களத்தின் நிதியேற்பாட்டின் அடிப்படையில் அரச வணிக கூட்டுத்தாபனத்தின் மூலம் அரிசி மெற்றிக் தொன் 50,000 இறக்குமதி செய்யப்பட்டு திணைக்களத்தின் பலாங்கொடை களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | நிறுவனம் தாபிக்கப்பட்டதன் நோக்கத்தின் பிரகாரம் பணிகள் நிறைவேற்றப்படுவதை கண்காணித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தது. எனினும் திணைக்களத்தால் அந்த பணிகள் மேற்கொள்ளப்படாதிருந்த துடன் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு அரிசி இறக்குமதிக்காக இலங்கை வணிக கூட்டுத்தாபனத்திற்கு (STC) இற்கு மாற்றி அனுப்பப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | திணைக்களத்திற்குச் சொந்தமான மெற்றிக் தொன் 223,415 இயலளவையுடைய 93 களஞ்சியங்கள் காணப்பட்டதுடன் அதில் களஞ்சிய இயலளவு மெற்றிக்தொன் 180,895 ஆன 75 களஞ்சியங்கள் வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தது. அதில் 55 களஞ்சியங்கள் தொடர்பாக 24 வாடகையாளர்களிடமிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 63,955,810 வாடகைத் தொகை கிடைக்க வேண்டியிருந்தது. | 2022 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் ரூபா 44,070,840 வாடகைப் பணம் கிடைத்துள்ளதுடன் சரியான பிரகாரம் செலுத்தாதவர்களுக்காக 2022 யூன் 30 ஆந் திகதிக்கு முன்னர் கொடுப்பனவு மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | குறித்துரைத்த திகதியில் வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | திணைக்களத்திற்குச் சொந்தமான 16 களஞ்சியங்கள் மாத்திரம் திணைக்களத்தின் பொறுப்பில் காணப்பட்டதுடன் 2021 ஆம் ஆண்டில் அவற்றில் அரிசி களஞ்சியப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. மேலும் அதில் அம்பாந்தோட்டைக் களஞ்சியம் நவீனமயப்படுத்துவதற்காக ஆண்டின் போது ரூபா 16,822,621 செலவினம் செய்யப்பட்டிருந்தது. | தென் மாகாணத்தில் கணிசமான அளவு நெல் உற்பத்தியில் அம்பாந்தோட்டை மாவட்டமும் ஒன்றாகும். அதனால் அந்தக் களஞ்சியத்தை நவீனமயப்படுத்தி பயன்படுத்துமாறு முன்னாள் விவசாய அமைச்சரின் கோரிக்கையின் படி களஞ்சியத்தை திருத்தி பாவனைக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | திணைக்களத்திற்கு சொந்தமான களஞ்சியங்களை விளைவற்று வைக்காமல் கண்காணித்து கொள்ள வேண்டியதுடன் திணைக்களத்தின் தேவைக்காக பயன்படுத்தாதிருக் குமாயின் ஏனைய தரப்பினருக்கு வாடகைக்கு வழங்கி வருமானத்தை உழைப்பதற்கேனும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | திணைக்களத்திற்குச் சொந்தமான களஞ்சியங்களின் இயலளவு மெற்றிக்தொன் 3,655 ஆன வவுனியா மற்றும் கந்துறுவெல களஞ்சியங்கள் இரண்டும் கைவிடப்பட்டதுடன் அதற்கான கோவைகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. அந்த களஞ்சியங்களுக்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2012 ஆம் ஆண்டிற்கு பின்னர் இந்த களஞ்சியங்கள் இரண்டும் பயன்படுத்தப்படாதிருந்த துடன் நவீனமயப்படுத்த வேண்டிய நிலைமையில் காணப்படுகின்றமையால் 2023 இன் பாதீட்டு நிதியேற்பாட்டின் மூலம் நவீனமயப்படுத்தி பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | அரசாங்கத்தின் நிதியல்லா சொத்துக்களை சரியான பிரகாரம் முகாமைத்துவம் செய்து உச்ச அளவில் செயற்திறனுடன் பயன்படுத்துவதை கண்காணித்துக் கொள்ளல் வேண்டும். |
| (எ) | வெயாங்கொடை ஆய்வுக் களஞ்சியம் தொடர்பாக 2012/2013 ஆம் ஆண்டுகளில் அரிசி ஆலை உரிமையாளர்களுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஒரு அரிசி ஆலை உரிமையாளரிடமிருந்து பெறவேண்டிய ரூபா 6,102,932 ஆன தொகை 2022 பெப்ரவரி 15 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உணவு திணைக்களத்திற்கு அறவிட வேண்டிய ரூபா 6,102,932 பணத்தை அறவிடுவதற்காக வழக்கு தொடருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | திணைக்களத்தின் பொறுப்பில் காணப்படுகின்ற சகல களஞ்சியங்களினதும் மின்சார பட்டியல் செலுத்துதல் தொடர்பான ஆவணம் திணைக்களத்திடம் காணப்படாதிருந்ததுடன் வாடகைக்கு பெறப்பட்டுள்ள களஞ்சியங்களின் வாடகை மீளளிப்புச் செய்கின்ற 07 களஞ்சியங்கள் தொடர்பாக மாத்திரம் ஆவணங்கள் பேணிச் செல்லப்பட்டிருந்தது. அதில் 06 களஞ்சியங்கள் தொடர்பாக 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 8,082,214 மின்சாரப்பட்டியல் மற்றும் ரூபா 275,094 நீர்க் கட்டண பட்டியல் என்பன | திணைக்களத்தின் பொறுப்பில் காணப்படுகின்ற களஞ்சியங்களுக்கிடையே அநேகமான களஞ்சியங்கள் வாடகை அடிப்படையில் தனியார் நிறுவனங்களுக்கு உடன்படிக்கை செய்து வழங்கப்பட்டுள்ளதுடன் அந்த கட்டிடங்களுக்குரிய மின்சார பட்டியல் அந்த நிறுவனத்தினால் உரியவாறு செலுத்தப்படுகின்றது. அதனால் அந்த மின்சார பட்டியல் செலுத்துதல் தொடர்பாக பதிவேடு இல்லாதிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | திணைக்களத்திற் குரிய களஞ்சியங்களின் பற்றுச்சீட்டுக்களை தீர்த்து வைப்பதற்குரிய விபரங்களை நிறுவனத்தில் வைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஐ) | திணைக்களத்திற்குச் சொந்தமாக காணப்படுகின்ற களஞ்சியத்திற்காக திணைக்களத்தினால் நவீனமயப்படுத்தல், நீர், மின்சாரம், ஊழியர் சம்பளங்கள், ஆதனங்கள் போன்றவைகளுக்கான செலவினங்கள் செய்யப்படுகின்றது. எனினும் ஒவ்வொரு களஞ்சியத்திற்காகவும் செலவிடப்பட்ட மொத்த செலவினம் தொடர்பாக நேரடியாக இனங்காணக் கூடிய ஆவணங்கள் நிறுவனத்தினால் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. திணைக்களத்தினால் களஞ்சியக் கட்டுப்பாட்டிற்காக இவ்வாறான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று அறிமுகப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | நிறுவனத்திற்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையொன்று சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றது. எமது திணைக்களத்திற்கு சொந்தமாக காணப்படுகின்ற களஞ்சியங்களின் வினைத்திறனை செயற்திறனாக உயர்வடையச் செய்தல் திணைக்களத்தின் நோக்கமாகும். எனினும் திறைசேரி நிதியேற்பாட்டின் அடிப்படையில் நவீனமயப்படுத்தல், நீர், மின்சாரம், ஆளணி வேதனங்களுக்காக கொடுப்பனவு செய்யப்படுவதுடன் அதன் பிரகாரம் செலவிடப்பட்ட செலவினம் தொடர்பான அறிக்கை திணைக்களத்திடம் உள்ளது. | சரியான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை யொன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தால் 2030 ஆம் ஆண்டு வரையில் பட்டினியை ஒழிக்கும் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அமுல்படுத்துவதற்கு இனங்காணப் பட்டிருப்பதுடன் அதன் கீழ்<br>• உணவு விலைத் தளம்பலைத் தடுத்தல்.<br>• உணவு ஒதுக்கத்தை பேணிச் செல்லல்<br>என்ற இலக்குகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டு வரையிலும் களஞ்சியம் நிர்மாணித்தல் தொடர்பில் | ஏற்றுக்கொள்கின்றோம். | நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். |

மாத்திரம் கவனம் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்தக் களஞ்சியத்தில் உணவுத் திணைக்களத்திற்குச் சொந்தமான எந்தவொரு உணவு இருப்பும் காணப்படவில்லை.

## 5. நல்லாளுகை

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40.2 ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திற்கு சொந்தமாக உள்ளக கணக்காய்வு பிரிவொன்று காணப்படாதிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் பிரகாரம் செயற்படுவதை கண்காணித்துக் கொள்ளல் வேண்டும். |

### 5.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 41 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு முகாமைத்துவக் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திற்குச் சொந்தமான வருமான தலைப்பு அல்லது உள்ளக கணக்காய்வு பிரிவொன்று காணப்படாதிருந்தமையால் திணைக்கள மட்டத்தில் கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கான இயலுமை காணப்படாதிருந்ததை அறியத்தருகின்றோம். | சட்டத்தின் பிரகாரம் செயற்படுவதை கண்காணித்தல் வேண்டும். |

## 6. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 214 ஆக இருந்ததுடன் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 105 ஆனமையால் ஊழியர் வெற்றிடங்கள் 109 காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரிடமும், ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடமும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |